பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**தனியார் கார் காப்புறுதிப் பத்திரம்**

இந்த ஆவணமானது, உங்களது காப்புறுதியைப் பற்றிய சாராம்ச விளக்கமொன்றை வழங்குகின்றது. பூரண விபரங்களுக்கு, முழுமையான காப்புறுதிப் பத்திரத்தையும் அட்டவணையையும் உசாவவும், ஏதும் முரண்பாடு காணப்பட்டால், காப்புறுதிப் பத்திரமே மேலோங்கியிருக்கும்.

**1. இக்காப்புறுதிக் காப்பீட்டு வகை**

**தனியார் கார் காப்புறுதிப் பத்திரமானது** உங்களது வாகனத்துக்கு ஏற்படும் சேதத்துக்கும், அதன் உபயோகத்தினால் ஏனையோர் மீதான உங்கள் சட்டபூர்வ பொறுப்புக்கும் நிதிப் பாதுகாப்பு வழங்குவதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணம், அடிப்படையில் **பூரண** காப்பீட்டினை விபரிக்கின்றது.

**2. பிரதான பயன்பாடுகள் (பூரண காப்பீட்டின் கீழ் எது காப்பீடு செய்யப்படுகின்றது)**
உங்கள் காப்புறுதிப் பத்திரமானது பல்வகை அம்சங்களில் உங்களை பாதுகாக்கின்றது. உங்களது குறிப்பான காப்பீட்டு மட்டம் (உ+ம். பூரண, மூன்றாம் தரப்பு மாத்திரம்) உங்களது **காப்புறுதிப் பத்திர அட்டவணையில்** காண்பிக்கப்பட்டுள்ளது.

**(i) உங்கள் வாகனத்துக்கு இழப்பு அல்லது சேதம் (பிரிவு I)**

பின்வருவனவற்றின் விளைவாக உங்களது காருக்கு ஏற்படும் இழப்பையும் சேதத்தையும் நாம் காப்பீடு செய்வோம்.

- எதேச்சையான புறக் காரணிகள் (மோதல் அல்லது தாக்கம்)
- தீ, வெடிப்பு அல்லது சுய தீப்பற்றல்.
- கொள்ளை, வீடுடைப்பு அல்லது களவு.
- வன்முறைச் செயல்கள்.
- **மேலதிக பயன்பாடுகளை உள்ளடக்குகின்றது)** – மிக அண்மிய அங்கீகரிக்கப்பட்ட திருத்துனரிடம் காரை இழுத்துச் செல்வதற்கான நியாயமான செலவை (ரூ.20,000/- வரை அல்லது காப்புறுதிப் பத்திர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் நாம் செலுத்துவோம்).

**(ii) மூன்றாம் தரப்பினர் மீதான உங்களது சட்டபூர்வ பொறுப்பு (பிரிவு II)**

பின்வருவனவற்றுக்கு சட்டபூர்வமாக நீங்கள் செலுத்த வேண்டிய நட்டஈட்டை நாம் காப்பீடு செய்வோம்.

- **யாரும் மூன்றாம் தரப்பினருக்கு மரணம் அல்லது உடற்காயம் –** இதற்கான காப்பீடு **வரையறுக்கப்படவில்லை**. (கவனிக்க – இது உங்களது பின்னாசன பயணியை உள்ளடக்குவது **இல்லை**).
- **மூன்றாம் தரப்பினரின் சொத்துக்கு சேதம் –** சம்பவமொன்றுக்கு **ரூ5,000,000** வரைஅல்லது உங்களுடைய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறை வரை காப்பீடு செய்யப்படுகின்றது.

**(iii) வைத்திய செலவினங்கள் (பிரிவு III)**

- விபத்தொன்றின் நேரடி விளைவாக நீங்கள் அல்லது உங்கள் காரில் இருந்த எவரும் காயமுற்றால் **ரூ.2,000** வரை நியாயமான வைத்திய செலவை நாம் செலுத்துவோம்.

**3. பிரதான விடுகைகள் (காப்பீடு செய்யப்படாதன)**

- **தேய்மானம் –** காலஞ் செல்வதனால், தொழில் நுட்பத்தினால் அல்லது மின்சார செயலிழப்பினால் ஏற்படும் கிரமமான சேதம் காப்பீடு செய்யப்பட்டில்லை.
- **விளைவாந்தன்மையான இழப்பு –** உங்களது கார் திருத்தப்பட்டுக் கொண்டிருப்பதனால் உங்கள் வருமான இழப்பு போன்ற மறைமுக இழப்புகள் காப்பீடு செய்யப்படவில்லை.
- **சில்லும் காற்றுப் பைகளும் -** அதே விபத்தின் போது கார் வேறும் சேதங்களுக்கு ஆளானால் மாத்திரம், சில்லின் பிரதியீட்டு செலவில் 50% மட்டும் காப்பீடு செய்யப்படும். அதே போன்று, அதே நேரத்தில் வேறும் சேதங்கள் ஏற்பட்டால், காற்றும் பைகளும் சம்பந்தப்பட்ட தொகுதிகளும் பிரதியீட்டு செலவில் 50% மட்டும் காப்பீடு செய்யப்படும்.
- **போதையில் செலுத்துதல் –** ஓட்டுனர் மது அல்லத போதை வஸ்த்தின் தாக்கத்தில் இருக்கும் போது ஏற்படும் ஏதும் விபத்து அல்லது இழப்பு.
- **அனுமதிப் பத்திரமில்லா சாரதிகள் –**செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத நபரொருவரினால் வாகனம் செலுத்தப்படும் போது ஏற்படும் இழப்பு.
- **நியதிகளுக்கு புறம்பாக உபயோகித்தல் –** ஓட்டப் போட்டி, வாடகைக்கு விடுதல் அல்லது நன்கொடைக்காக பயணிகளை ஏற்றச் செல்லல் போன்ற நோக்கங்களுக்கு தனியார் வாகனத்தை உபயோகித்தல்.
- **இயற்கை அனர்த்தங்களும் மக்கள் குழப்பமும் -** சூராவளி, வெள்ளம், நிலநடுக்கம், கலகம், பணிப் பகிஷ்கரிப்பு அல்லது பயங்கரவாதம் என்பன, நீங்கள் சேர்த்துக் கொள்ளல் காப்பீடொன்றை கொள்வனவு செய்திருந்தாலன்றி, விலக்கப்பட்டுள்ளன.
- **ஒப்பந்த பொறுப்பு –** ஒப்பந்தமொன்றின் கீழ் நீங்கள் சுயமாக ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்பை நாம் காப்பீடு செய்வதில்லை.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்தும் முறை**

ஒரு வருட காலமாகிய, முழுக் காப்புறுதிக் காலத்துக்கும் **ஒரே தடவையில்** உங்கள் காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**5. பெயர் குறிக்கப்பட்டவர்களை/பயன்பெறுனர்களை கொண்டிருப்பதன் முக்கியத்துவம்**

இந்தக் காப்புறுதிப் பத்திரமானது, அடிப்படையில் உங்களுக்கு அல்லது மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு செலுத்துவதுடன், உங்கள் மரணத்தின் போது, காப்புறுதிப் பத்திரத்தின் கீழான பயன்பாடுகள் அல்லது சட்டபூர்வ பாதுகாப்பு உங்களது சட்டபூர்வ தனிப்பட்ட பிரதிநிதிக்கு கைமாறும். உங்களது மரணச் சொத்து இலகுவாக முகாமை செய்யப்படுவதை உறுதி செய்வதற்கு, 'தெளிவான இறுதி விருப்பாவணம்' ஒன்றைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும்.

**6. காப்புறுதிப் பத்திரமுடையோர் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தும் கடமைப்பாடுகள்**

உங்களது முன்வைத்தல் படிவமே இந்த காப்புறுதி ஒப்பந்தத்தின் அடிப்படையாகையால், அதில் உண்மையான, சம்பூரணமான தகவல்களை நீங்கள் வழங்க வேண்டும். பொறுப்பின் மீது தாக்கம் செலுத்தத் தக்க ஏதும் முக்கிய (உ+ம். காரின் வடிவு மாற்றம், ஏதும் உபயோக மாற்றம், உரிமையாளர் மாற்றம் போன்ற) மாற்றங்கள் பற்றி நீங்கள் எமக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவது, உங்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்படுவதற்கு அல்லது காப்புறுப் பத்திரம் இரத்தாக்கப்படுவதற்கு வழிகோளலாம்.

**7. கோரிக்கையொன்று முன்வைக்கப்படும் போது காப்புறுதி பெருநரின் கடமைப்பாடுகள்.**

ஏதும் விபத்து அல்லது இழப்பு ஏற்பட்டால் நீங்கள்,

- **நியாயமான முன்னெச்சரிக்கை எடுக்கவும்** – மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதில் இருந்தும் உங்கள் காரை நீங்கள் பாதுகாக்க வேண்டியதோடு, அதனை பாதைத் தகைமையில் வைத்திருக்கவும் வேண்டும்.
- **பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டாம்** – குற்றத்தை ஏற்றுக் கொள்ளவோ, எமது எழுத்து மூல சம்மதமின்றி எதனையும் முன்வைக்கவோ அல்லது மூன்றாம் தரப்பொன்றுக்கு எதனையும் செலுத்துவதற்கு ஏதும் வாக்குறுதி வழங்கவோ வேண்டாம்.
- **முழுமையாக ஒத்துழைக்கவும்** – கோரிக்கையை நாம் கையாள்வதற்கு எமக்குத் தேவைப்படும் எல்லா தகவல்களையும் உதவிகளையும் நீங்கள் வழங்க வேண்டும்.

**8. கோரிக்கையொன்றின் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்**

**படிமுறை 1 – உடனடியாக எமக்கு அறிவிக்கவும்**

- ஏதும் விபத்து, இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டதன் பின் உடனடியாக நீங்கள் பயார்ளபஸ்ட்டுக்கு அறிவிக்க வேண்டும்.
- களவு அல்லது குற்றச் செயலின் போது நீங்கள் உடனடியாக பொலீசுக்கு அறிவிக்கவும் வேண்டும்.

**படிமுறை 2 – திருத்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டாம்**

**படிமுறை 3 – ஆவணங்களைச் சமர்ப்பிக்கவும்**

- உங்களுக்கு கிடைக்கப் பெறும் ஏதும் கடிதங்கள் அல்லது சட்ட அழைப்பாணைகள் உட்பட எல்லா ஆவணங்களையும் சம்பவத்தின் **15 நாட்களுக்குள்** எமக்கு சமர்ப்பிக்கவும்.

## 9. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎+94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

## 10. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎+94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

## 11. வேறேதும் தகவல்

- **கோரிக்கையின்றிய நலக் கொடை (NCB)** – முழு வருடத்துக்கும் நீங்கள் ஏதும் கோரிக்கயை முன்வைக்காதிருந்திருந்தால், பதுப்பித்தல் காப்புறுதிக் கட்டணத்தில் உங்களுக்கு கழிவு கிடைக்கலாம். இந்தக் கழிவானது, அடுத்து வரும் கோரிக்கையற்ற ஒவ்வொரு வருடத்துக்கும் அதிகரித்துச் செல்லலாம்.
- **வித்தியாசமான காப்பீட்டு வகைகள் –** இந்த ஆவணமானது, பூரண காப்புறுதிக் காப்பீட்டை விபரிக்கின்றது. நீங்கள்
    - **மூன்றாம் தரப்பு, தீ மற்றும் களவு –** இது மூன்றாம் தரப்பினர் மீதான உங்களது பொறுப்புடன், தீ மற்றும் களவினால் உங்கள் காருக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்தை காப்பீடு செய்யும்.
    - **மூன்றாம் தரப்பு மாத்திரம் –** மூன்றாம் தரப்பினர் மீதான உங்களது பொறுப்பை மாத்திரம் இது காப்பீடு செய்வதுடன், உங்களது சொந்தக் காரின் சேதத்தை காப்பீடு செய்வதில்லை.

- **இரத்துச் செய்தல் -** நீங்கள் ஏதும் கோரிக்கயை முன்வைக்காதிருந்திருந்தால், 7 நாள் அறிவித்தல் மூலம் நீங்கள் காப்புறுதிப் பத்திரத்தை இரத்துச் செய்து, பகுதி மீள்பெறலைப் பெற்றுக் கொள்ளலாம். நாமும் 7 நாள் அறிவித்திலுடன் காப்புறுதிப்

பத்திரத்தை இரத்துச் செய்யலாம். அதற்கு விகிதாசார மீள்செலுத்தலொன்று வழங்கப்படும்.

**தனியார் கார் காப்புறுதி பத்திரத்தின் கீழ் வழங்கப்படும் மேலதிக தேர்வுக்குரிய காப்பீடுகள் –**

- M01 **தீர்வையற்ற வாகனம் –** கோரிக்கையொன்றின் பின்னர், உள்நாட்டு சுங்கத் தீர்வை செலவினம் நீங்கலாக, தீர்வையற்ற வாகனமொன்றின் பாகங்களின் மாற்றீடு காப்பீடு செய்யப்படுகின்றது.
- M02 **வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகை –** வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகையின் கீழான காப்புறுதி செய்யப்பட்ட வாகனமொன்றுக்கான கோரிக்கை, கடன் முற்றாக செலுத்தித் தீர்க்கப்படும் வரை, அதன் சட்டபூர்வ உரிமையாளருக்கு (கடன் வழங்குனருக்கு) நேரடியாக செலுத்தப்படுவதை உறுதி செய்கின்றது.
- M03 **சகல கோரிக்கை மேலீடு –** காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் முன்வைக்கப்படும் ஒவ்வொரு கோரிக்கைக்கு'ம், மேலீடு எனப்படும் நிர்னயிக்கப்பட்ட ஆரம்ப தொகையொன்றை காப்புறுதி செய்யப்பட்டவர் செலுத்த வேண்டும்.
- M06A **தொடக்கம்** M06Z **வரை தனியார் விபத்து பயன்பாடுகள் –** வாகனத்தினால் ஏற்பட்ட விபத்தின் காரயமான மரணத்துக்கு அல்லது குறிப்பான காயங்களுக்கு பெயர் குறிக்கப்பட்ட நபர்களுக்கு குறிப்பான நட்டஈட்டை, மேலதிக காப்புறுதிக் கட்டணமொன்றின் பேரில், இக்காப்புறுதிப் பத்திரம் செலுத்தும்.
- M30 **பணிப் பகிஷ்கரிப்பு, கலகம், குழப்பம் –** இக் காப்புறுதிப் பத்திரமானது, பணிப் பகிஷ்கரிப்பு, கலகம், குழப்பம் என்பவற்றினால் ஏற்பட்ட வாகன விபத்துக்கு பாதுகாப்பை அதிகரிக்கும். எனினும் போர் மற்றும் பயங்கரவாதத்தை உள்ளடக்காது. பணிப் பகிஷ்கரிப்பு, கலகம், குழப்ப காப்பீடானது (SRCC), காப்புறுதி செய்யப்பட்டவர் இக்காப்பீடுகளைத் தேர்ந்தெடுத்து, NITF இனால் நிர்னயிக்கப்பட்ட விகிதாசாரங்களின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும் மேலதிக காப்புறுதி கட்டணத்தை செலுத்துவதன் பேரில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் (NITF), உள்நாட்டு பணிப் பகிஷ்கரிப்பு, கலகம், குழப்பக் குழாமினூடாக வழங்கப்படும். வெளிப்படுத்தப்பட்டோ அல்லது உட்கிடையாகவோ அல்லது வேறெந்த பெயரின் கீழோ, பயங்கரவாதத்துக்கு ஒத்த காப்பீட்டை காப்புறுதி வழங்குனர் மாற்றீடு செய்யவோ, குறைநிரப்புச் செய்யவோ அல்லது வழங்கப்படவோ மாட்டாது.
- M30T **பயங்கரவாதம் –** இக் காப்புறுதிப் பத்திரமானது, பயங்கரவாதத்தினால் ஏற்படுத்தப்பட்ட நேரடி வாகன சேதத்துக்கு, மேலதிக காப்புறுதி கட்டணத்தின் பேரில் பாதுகாப்பை அதிகரிக்கும். பயங்கரவாத காப்பீடானது (SRCC), காப்புறுதி செய்யப்பட்டவர் இக்காப்பீட்டைத் தேர்ந்தெடுத்து, NITF இனால் நிர்னயிக்கப்பட்ட விகிதாசாரங்களின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும் மேலதிக காப்புறுதி கட்டணத்தை செலுத்துவதன் பேரில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் (NITF), உள்நாட்டு பணிப் பகிஷ்கரிப்பு, கலகம், குழப்பக் குழாமினூடாக வழங்கப்படும். வெளிப்படுத்தப்பட்டோ அல்லது உட்கிடையாகவோ அல்லது வேறெந்த பெயரின் கீழோ, பயங்கரவாதத்துக்கு ஒத்த காப்பீட்டை காப்புறுதி வழங்குனர் மாற்றீடு செய்யவோ, குறைநிரப்புச் செய்யவோ அல்லது வழங்கப்படவோ மாட்டாது.
- M31 **வேலையாட்கள் நட்டஈடு –** அவர்களுடைய வேலையின் அங்கமாக காப்புறுதி செய்யப்பட்ட வாகனத்தில் இருக்கும் போது காயங்கள் அல்லது மரணத்துக்கு ஆளான வேலையாட்களின் சட்டபூர்வ பொறுப்புக் கோரிக்கைக்கு எதிராக தொழில் வழங்குனரை இது பாதுகாக்கும்.

- M33 **கண்ணாடி உடைவு – கோரிக்கையின்மை கொடைக்கு பராதீனமற்றது –** உங்களது கோரிக்கையின்மை கொடைக்கும், சாதாரண காப்புறுதிப் பத்திர மேலீட்டுத் தொதையை செலுத்துவதற்கும் பராதீனமற்ற வகையிலும் உடைந்த காற்றுத் தடுப்புக் கண்ணாடி அல்லது யன்னலுக்கான கோரிக்கையை இது அனுமதிக்கின்றது.
- M34 **குறிப்பான இயற்கை அனர்த்த காப்பீடு –** வெள்ளம், சூராவளி, நிலநடுக்கம் மற்றும் மண் சரிவு போன்ற குறிப்பான இயற்கை அனர்த்தங்களினால் விளைந்த வாகன சேதத்துக்கு இது காப்பீட்டை அதிகரிக்கும்.
- M54**காற்றுப் பை விஸ்தரிப்பு -** காற்றும் பைகளின் பிரதியீட்டு செலவை, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பண வரையற வரை இது காப்பீடு செய்யும்.
- M80 **ஏதேச்சையான சேத மேலீடு –** அவரது வாகனத்தின் எதேச்சையான சேதத்துக்கான ஒவ்வொரு கோரிக்கைக்கும் குறிப்பிடப்பட்ட மேலீட்டுத் தொகையை செலுத்துவதற்கு காப்புறுதி செய்யப்பட்டவரை பொறுப்பாக்கின்றது.
- M82 **பாரப்படுத்தல் –** பூரண இழப்பின் போது, வாகனத்தின் மீது நிதி உரிமையைக் கொண்டுள்ள குறிப்பான கடன் வழங்குனருக்கு காப்புறுதி செலுத்துகையை பாரப்படுத்தும்.
- M32 **பயிலுனர் ஓட்டுனர் –** பெயர் குறிக்கப்பட்ட பயிலுனர் ஓட்டுனர் ஒருவர் காப்புறுதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளை ஓட்டிச் செல்லும் போது, அத்தகைய உபயோகத்துக்கான பிரயோகமாகும் மேலீட்டின் பேரில். காப்பீட்டை விஸ்தரிக்கும்
- M35 **இழுத்துச் செல்லும் கட்டணங்கள் –** விபத்தொன்றின் பிறகு வாகனம் இழுத்துச் செல்லப்படுவதற்கு காப்புறுதிப் பத்திரம் செலுத்தும் ஆகவும் கூடிய (10,000) தொகையை இந்த புறக்குறிப்பு அதிகரிக்கச் செய்யும்.
- M55 **அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் திருத்த விஸ்தரிப்பு –** பொறுத்தப்படும் புதிய பாகங்களின் காலத்துக்குரிய வழமையான கழிவு இன்றி, வாகனத்தின் உத்தியோகபூர்வ முகவரிடம் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு இக்காப்புறுதிப் பத்திரம் அனுமதிக்கின்றது.

**குறிப்பு –** விடுகைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய பூரண விபரங்களுக்கு முழு **பெயார்பஸ்ட் தனியார் கார் காப்புறுதி பத்திரத்தை** தயவு செய்து உசாவவும்.

பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.